புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **19 செப்டம்பர், 2022**

# பத்திரிகை செய்தி

பருவநிலை மாற்றம் காரணமாக கடந்த சில நாட்களாக புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. இதனால் காய்ச்சல், சளி, இருமல் போன்றவற்றால் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போதைய வைரஸ் காய்ச்சல் பரவல் நிலவரம் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (19-09-2022) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் ஐதராபாத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தலைமைச் செயலர் திரு ராஜீவ் வர்மா, சுகாதாரத் துறைச் செயலர் திரு உதயகுமார், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு. அபிஜித் விஜய் சௌதரி, ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர். ராகேஷ் அகர்வால், ஐதராபாத்தில் உள்ள மத்திய சிசிஎம்பி மைய இயக்குனர், இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரியின் இயக்குநர் திரு உதய சங்கர், ராஜீவ் காந்தி மகளிர் & குழந்தைகள் மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் சுஜாதா ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வைரஸ் காய்ச்சல் பரவலின் தற்போதைய நிலவரம், சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், சளி, ரத்த மாதிரி சோதனைகள், மருத்துவர்கள், படுக்கை வசதி, மருந்துகளின் இருப்பு மருத்துவ ஊழியர்களை கூடுதலாக பணியமர்த்தல் ஆகியவை குறித்து கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத்தில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- தற்போதைய சூழ்நிலையை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். பள்ளிகளுக்கு ஒரு வார கால விடுமுறை விடப்பட்டிருந்தாலும் தீவிர கவனம் செலுத்தி குழந்தைகளுக்கு தொற்று பரவுவதை குறைக்க வேண்டும். குழந்தைகளிடமிருந்து பெரியோர்களுக்கு பரவாமலும் பாதுகாக்க வேண்டும்.
- நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்த வேண்டும். அவசரகால மருத்துவ குழுவினரை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகள் சிகிச்சை பிரிவு, வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு ஆகியவற்றில் கூடுதல் மருத்துவர்களை, மருத்துவ ஊழியர்களை பணியமர்த்த வேண்டும்.
- காய்ச்சல் பரவுவதால் மக்களிடையே ஏற்படும் அச்சத்தை போக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மக்கள் பின்பற்ற வேண்டிய எச்சரிக்கை வழிமுறைகளையும் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் முகக் கவசம் அணிதல் கைகளை கழுவுதல் போன்ற தூய்மை பழக்கங்களைப் பின்பற்ற அறிவுறுத்த வேண்டும்.
- வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அறிவியல் பூர்வமான அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும். தடுப்புப் பணிகளை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான மருந்துகளை போதிய அளவு இருப்பு வைக்க வேண்டும். பொதுமக்கள் கூடும் இடங்களை தடுப்பு நடவுகளை நடவடிக்கைகளை பின்பற்ற அறிவுறுத்த வேண்டும்.

என்று ஆலோசனை வழங்கினார்.